RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s317

OPEN ACCESS

# ‘கீறல்கள்’ புதினம் முன்மொழியும் சமுதாய மாற்றம்

**ப. டேவிட் பிரபாகர் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, சென்னை கிறித்தவக் கல்லூரி, சென்னை-600059, தமிழ்நாடு, இந்தியா.

# Social Change as Depicted in Keeralkal Novel

**P. David Prabhakar [a, *]**

[a] Department of Tamil, Madras Christian College, Chennai-600059, Tamil Nadu, India

* Corresponding Author: tamilprofessor@gmail.com

Received: 18-04-2021
Revised: 03-04-2022
Accepted: 15-05-2022
Published: 16-07-2022

Check for updates

**ABSTRACT**

The purpose of this study is to analyse ‘Keeralkal’, a rationale novel in a social and historical perspective. This novel describes the class conflict and advocates a social change for the upliftment of the oppressed poor irrespective of their societal hierarchy. The novel which emerges out of the conflicts in the Christian family background determined by the institutionalised churches and puts forth the solutions also. Although the story is based on the family, the novel explains that the social system is the cause of all the problems. Therefore, the solution to this problem must be born out of the community. The novel urges the Church to fight against poverty and economic inequality in the country. Economic changes are needed to break the caste hierarchy in the society. ‘Keeralkal’ novel suggests communism as a solution to such socio-economical changes. That communism is said to be not just communism but spiritual communism. Hence, the author Isaac Arumairajan proposes a new idea of Christian communism which will be the way out for equality in the society.

**Keywords:** Socialist Realism, Isaac Arumairajan, Christian Fiction, Economic Disparity, Church Reformation, Christian Communism.

## முன்னுரை

பேராசிரியர் ஐசக் அருமைராஜன் எழுதிய ‘கீறல்கள்’ புதினம் தமிழகத்தின் தென் கோடியிலுள்ள புன்னைக்காடு எனும் நகர்ப்புறத்தைக் கதைக்களமாகக் கொண்டு எழுதப்பட்ட ஒரு குடும்பத்தின் கதை (Isaac Arumairajan, 1975). பொருளாதாரத்தால் அச்சத்துக்கும் அவலத்துக்கும் ஆளான ஒரு வீட்டின் கதை. சமுதாயத்திற்கும் வீட்டிற்கும் உள்ள உறவை, முரண்பாடுகளைப் பொருளாதார அடிப்படையில் இப்புதினம் விவரிக்கிறது. குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்களுக்குக் காரணம் சமுதாயமே என்பதை உணர்த்தி சமுதாய மாற்றத்துக்கான தீர்வினை வழங்குவதாக இக்கதை அமைகிறது. ‘சமுதாயம் என்பது அதன் தன்னிலைகளாலும் புறவய தாக்கங்களினாலும் மாறுதலுக்குரியதுதான், இம் மாற்றம் முன்னோக்கி அமைவது. நல்ல இலக்கியம் என்பது சமுதாய மாற்றத்தை உள்வாங்கியிருக்கும்’. இவ்வகையில் கீறல்கள் புதினம் சமூக மாற்றத்திற்கான உள்ளடக்கத்தைக் கொண்ட முற்போக்குப் புதினமாக விளங்குகிறது.

## பேராசிரியர் ஐசக் அருமைராஜன்

படைப்பாளராகவும் கலை இலக்கியத் திறனாய்வாளராகவும் விளங்கியவர் பேராசிரியர் ஐசக் அருமைராஜன். கீறல்கள், அழுக்குகள், தவறான தடங்கள், காரணங்களுக்கு அப்பால் ஆகிய

புதினங்களை படைத்தவர். முல்லை மாடம், நெடுமான் அஞ்சி முதலிய செய்யுள் நாடகங்களையும் தமிழுக்குத் தந்தவர். வாசிப்பவனை மறுபடியும் சிந்திக்க வைக்காத எந்தக் கதையும் உயிர் உள்ள கதை அல்ல எனக் கருதும் ஐசக் அருமைராஜன் கிறித்தவக் கம்யூனிசம் என்ற கருத்தியலைத் தன் 'கீறல்கள்' புதினத்தின் வாயிலாகத் தமிழுக்கு வழங்கியுள்ளார்.

## கதையின் சமூக, வரலாற்றுப் பின்புலம்

'படைப்பு, படைப்பாளன், சமுதாயம் எனும் இவை தமக்குள் நெருக்கமுறப் பிணைப்பு கொண்டவை. இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளும் அவற்றின் தன்மைகளும் குறிப்பிட்ட சமுதாய அமைப்பின் காரண காரியங்களோடு நேரடியாக உறவு கொண்டவை' என்பதால், கீறல்கள் புதினம் எழுந்த சமூக வரலாற்றுப் பின்புலங்களை அறிவது அவசியமாகிறது.

குமரிப் பகுதியில் கிறிஸ்தவ அருட்பணியாளர்களின் வருகை, மதமாற்றம், கல்வி வாய்ப்பு, புதிய குடியிருப்புகள், இடம்பெயர்வு போன்ற காரணங்களால் சமுதாய நிலையில் மாற்றங்கள் நிகழ்ந்தன. இதன் விளைவாக மேல் சாதியினருக்கு எதிராகத் தோள்சீலைக் கலகங்கள் எழுந்தன. அடித்தட்டு மக்கள் ஒடுக்குமுறையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. குறிப்பாக நாடார் சமூகத்தில் பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்பட்டன.

நாயர்களின் குடிபெயர்வு, ஒடுக்கப்பட்ட சாதியினருக்குக் கிடைத்த நிலவுரிமை, எஸ்டேட்டுகளில் கிடைத்த பணி வாய்ப்புகள் போன்றவையும் சமுதாய மாற்றங்களுக்கு வழிவகுத்தன. ஆங்காங்கு கிறிஸ்தவத் தேவாலயங்கள் கட்டப்பட்டன. திருச்சபை என்னும் அமைப்பு புதிய அதிகாரமாக உருப்பெற்றது. அந்த அமைப்பில் ஒடுக்கப்பட்ட சமூகங்கள் இடம் பெறலாயின. ஆயினும் தமிழகத்தின் சாதியக் கூறுகளைத் திருச்சபை உள்வாங்கிக் கொண்டதால் பல்வேறு ஏற்றத்தாழ்வுள்ள படிநிலைகள் கொண்டதாகவே இவ்வமைப்பு உருக்கொண்டது. திருச்சபை அதிகாரம், கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் ஒரே சமூகத்தின் சில குடும்பங்கள் அதிகாரம் பெற்றன. இதன் காரணமாக வசதி படைத்தவர்கள் மேல்நிலையாக்கம் பெற்றனர்; நடுத்தர வர்க்கத்தினர் மேல்தட்டைச் சார்ந்து இயங்கியனர். அடித்தட்டு வர்க்கம் தனியே உருவானது. இதனால் சாதிக்குள் சாதிகள் உருவாயின. இந்தப் பின்னணியில்தான் கீறல்கள் புதினம் எழுகிறது.

## கீறல்கள்- கதை

ஐந்து பிள்ளைகள் கொண்ட ஒரு ஏழை கிறிஸ்தவக் குடும்பத்தின் கதை இது. தாய் மேரியும் தந்தை முத்தையாவும் குடும்பத்தை முன்னேற்றப் பாடுபடுகின்றனர். பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றனர். குடும்பத்தின் சூழ்நிலையும் பொருளாதாரமும் சரிவர அமையாததால் அவர்களின் கனவு சிதைகிறது. செல்லப்பா எனும் மகன் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்து நக்சலைட்டாக மாறிவிடுகிறார்; பின்னர் காவல்துறையினரால் சுட்டுக் கொல்லப்படுகிறார். இன்னொரு பிள்ளை நாடக கம்பெனி ஒன்றோடு ஓடிவிடுகிறார். துரை எனும் இன்னொரு மகன் கோழிப் பண்ணை ஒன்றைத் தொடங்கி நடத்துகிறான். பெற்றோரைப் பற்றிய கரிசனை அவனுக்கு ஒரு துளியும் இல்லை. மாறாக அவனால் தொடர்ச்சியாகக் குடும்பத்தில் பிரச்சினைகள் உருவாகின்றன. தங்களுக்கிருக்கும் ஒரே சொத்தான வீட்டு நிலத்தில் ஒரு பகுதியை விற்று மகள்களுக்குத் திருமணம் செய்து வைக்கின்றனர் பெற்றோர். அவர்களாலும் பெற்றவர்களுக்கு உதவி இல்லை. நோயாளியாகிவிட்ட தாய் மருந்த கூட வாங்கப் பணம் இல்லாமல் இறுதியில் உயிரை விடுகிறார் என அவலத்தின் உச்சமாய் கதை முடிகிறது.

## சோசலிச எதார்த்த பண்பு

சோசலிச எதார்த்தவாதம் பொதுவுடமைத் தத்துவத்தில் பற்றுகொண்டு, சுரண்டப்பட்ட வர்க்கச் சார்புடன் மக்களுக்குத் தொண்டாற்றும் அனைத்துலகப் பார்வை கொண்டது. 'இக்கொள்கையின்படி

எழுத்தாளன் சமூக யதார்த்தத்தைப் படம் பிடிப்பதோடு மட்டுமல்லாமல் சமூகத்தில்தான் கண்டு கூறும் சிக்கல்களுக்கான தீர்வுகளையும் முன்மொழிய வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது' (Panchankam, 2016). இக்கருத்தை, 'எதார்த்தவாதம் முதலாளித்துவச் சமூக அமைப்பின் கொடுமைகளைக் காரணகாரியத் தொடர்புகளுடன் விமர்சனம் செய்யும் அளவோடு நின்று விடுகிறது ஆனால் சோசலிச யதார்த்தவாதம் மேற்குறிப்பிட்ட இலக்கணங்களுக்கு ஏற்ப சமுதாயத்தை விமர்சனம் செய்வதோடு பிரச்சனைகளுக்கு ஒட்டு மொத்தமான தீர்வுகளைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோகாட்டுவது' எனலாம் (Pichamuthu, 1998).

புதின ஆசிரியரே குறிப்பிடுவது போல, 'கீறல்கள் கற்பனையோ அல்லது நான் கண் மூடியவாறு கண்ட கனவோ அல்ல. ...பார்த்த சமுதாயத்தின்- ஒரு வீட்டின் கதை அது. இந்த கோணல் சமுதாயத்திலே இப்படி ஒரு காட்சியை நிகழ்ச்சியை அடுக்கடுக்கான துயரங்களை கண்டு, அவற்றை என் மன அறைக்குள் பூட்டி வைக்க முடியாமல் பொட்டி தெறிக்க விட்டதன் விளைவுதான் கீறல்கள். (Isaac Arumairajan, 1975).

சமூக அமைப்பானது நிலபிரபுத்துவத்தோடும் முதலாளித்துவத்தோடும் சமரசம் செய்து கொள்வதைக் கீறல்கள் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. சமுதாய ஏற்றத்தாழ்வுகளை மாற்ற தீவிரவாதத்தை தேர்ந்தெடுக்கும் செல்லப்பா எனும் மகனும் ஏற்றத்தாழ்வுகளை ஒப்புக்கொண்டு அதன் ஊடாகத் தன்னை மட்டும் மேல்நிலையாக்கம் செய்து கொள்ள முயலும் துரை எனும் மகனும் முரண் நிலையில் படைக்கப்பட்டுள்ளனர். செல்லப்பா தனது தந்தைக்கு எழுதிய கடித்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

ஒரு குடும்பத்தை விட நாடு பெரிது; அதில் பசியோடும் பட்டினியோடும் பரிதவிக்கும் மக்கள்- எச்சிலிலையைப் புரட்டி பருக்கைகளை எண்ணி எடுத்து உண்ணும் ஏழைகள் மிக அதிகம். ஒருவன் உண்டு உடுத்து மிதமிஞ்சி வாழ்கிறான். இன்னொருவன் பருக்கைகளை எண்ணி உண்டு தண்ணீரைக் குடித்து வயிற்றை நிரப்புகிறார். இதை காண வா மனிதன் புதிதாக பிறந்து கொண்டே இருக்கிறான்? நான் அப்படி நம்பவில்லை (Isaac Arumairajan, 1975).

## திருச்சபையில் மாற்றம்

இக்கதையில் தந்தையாக வரும் முத்தையாவின் நண்பர்களாக இடம்பெறும் சாமுவேல் நாட்டையரும் வேதமணி வாத்தியாருமசெயலூக்கமிக்க கதை மாந்தர்களாகப் படைக்கப் பட்டுள்ளனர். இவர்கள் வாயிலாகப் பொதுவுடமைச் சிந்தனையைப் புதின ஆசிரியர் பேசியுள்ளார்.

சாமுவேல் நாட்டையர் மனிதாபிமானம் கொண்டவர். திருச்சபையால் வறுமையை மாற்ற முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்; புரட்சியில் நம்பிக்கை இல்லாதவர்; போராடும் குணம் கொண்டவர். சமுதாயப் படிநிலையில் அடிநிலையில் இருப்பவர்களை உயர்த்தும் நோக்கம் அவருக்கு இருந்தாலும் ஆதிக்க சக்திகளிடமிருந்து அவரால் தன்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை.

தன்னிடம் தேவைக்கு மேல் இருப்பதை பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்கிற உணர்வு சாமுவேல் நாட்டையரிடம் வெளிப்படுவதைக் குளிரில் நடுங்கிய ஒரு கிழவிக்கு தான் அணிந்திருந்த அங்கியைப் போர்த்தியதன் வாயிலாக ஐசக் அருமைராஜன் பதிவு செய்கிறார்.

தன் உடலைச் சுற்றியிருந்த அங்கியை அவர் பார்த்தார். அது அவருக்கு கசந்தது. இதை போட்டுக் கொண்டும் நான் கிறிஸ்துவுக்காக வாழவில்லை என்றால் என்ன அர்த்தம்? வேதனை அவரைப் பிழிந்து எடுத்தது. கிழவியை நோக்கினார். அவள் விரைத்துப் போய் கிடந்தாள்.

நாட்டையர் அங்கியை அவசரமாகக் கழற்றினார். அதைக் கொண்டுபோய் கிழவியின் உடலுக்கு மேல் போட்டு அவளைப் போர்த்தினார். மானசீகமான ஒரு திருப்தி அவருக்கு கிடைத்தது. இந்த அங்கியை போட்டுக்கொண்டு அலைந்த நாட்களைவிட இந்த ஒருவினாடி நேரமே தான் ஒரு பெரிய சாதனையை செய்து விட்டது போல் தோன்றியது அவருக்கு (Isaac Arumairajan, 1975).

கிறிஸ்தவன் ஒரு கம்யூனிஸ்டாக இருக்க முடியாது என்று வாதிடும் சாமுவேல் நாட்டையருக்கு முரணாக வேதமணி வாத்தியார் படைக்கப்பட்டுள்ளார். திருச்சபையால் வறுமையை ஒழிக்க முடியாவிட்டால் அது ஒதுங்கி கம்யூனிஸ்டுகளுக்கு வழிவிட வேண்டும் என்பது இவரது கொள்கை. கம்யூனிச கருத்துகளுக்கும் இயேசுவின் போதனைகளுக்கும் வேறுபாடு இல்லை என்பது இவர் கருத்து.

நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவது, ஏழைக்குச் சோறிடுவது எல்லாமே புனித பணிகள்தான். இப்பணியைச் செய்யாமல் சமூகத்தை விட்டு ஒதுங்கி பொறுப்பற்று வாழும் மக்களை நினைத்து வேதமணி வாத்தியார் பின்வருமாறு புலம்புகிறார்.

ஆத்துமாவுக்கு சோறிடும் கிறித்தவர்களே! நீங்கள் சமுதாயத்திற்கு இறங்கி வாருங்கள்! நீங்கள் இந்த நாட்டிற்கு செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது உங்களிடம் இந்த நாடு அதிகம் எதிர்பார்க்கிறது. உங்களை இந்த நாடு நம்புகிறது (Isaac Arumairajan, 1975).

## கிறித்தவக் கம்யூனிசம்

திருச்சபையின் சீர்குலைவை ஒரு தேவாலயத்தின் மூலம்காட்ட முற்படுகிறது. கீறல்கள் புதினம் இதிலிருந்து மாறுபடும் தன்மையை புதின ஆசிரியரே பின்வருமாறு விளக்குகிறார். கீறல்கள் ஒரு தேவாலயத்தை மட்டும் எடுத்துக் கொள்ளாமல் அமைப்பை எடுத்துக் கொண்டு - ஆன்மாவிற்குச் சோறிடும் திருச்சபை வயிற்றுக்குச் சோறிட வேண்டும் என்கிறது. ஆனால் உண்மை அதுவல்ல. திருச்சபை ஆன்மாவுக்கும் சோறிடவில்லை, வயிற்றுக்கும் சோறிடவில்லை. இந்தத் திருச்சபை முற்றிலும் பணக்காரர்களின் பக்கம் சாய்ந்த திருச்சபை என்பதால் வேதமணி வாத்தியார் கம்யூனிசம் பற்றிச் சிந்திக்க வேண்டியவராகிறார் (Hepzibah Jesudason, 2014).

சாமுவேல் நாட்டையர் வித்தியாசமான போதகரே. அவர் அவர்களின் பிரதிநிதியாக இல்லை. அவர் அங்கியுடன் போராட்டத்தில் குதிக்கிறார். குதிக்க இதே மாதிரியான அங்கியைக் கழற்றிக் கிழவியின் குளிர் நடுக்கத்தையும் தீர்த்தார் என்பதை கவனிக்க வேண்டியிருக்கிறது. அது அவரின் பணிக்குரிய மனிதாபிமானம். திருச்சபையில் ஒரு காலையும் போராட்டகளத்தில் ஒரு காலையும் வைத்து நிற்கிற சாமுவேல் நாட்டையர் கம்யூனிசக் கருத்தாக்கம் கொண்டவரல்ல. திருச்சபையில் ஒரு முற்போக்குவாதி. திருச்சபையால் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்ற கருத்தாக்க உறுதி அவருக்குண்டு. இது எப்படி இருந்தாலும் திருச்சபையின் இயலாமை இவர் மூலம் வெளிப்படுகிறது (Isaac Arumairajan, 2002).

சமூகத்தின் சாதிய வட்டங்கள் உடைய, பொருளாதார மாற்றங்கள் தேவை. அத்தகைய பொருளாதார மாற்றங்களுக்குக் கீறல்கள் கம்யூனிசத்தை ஒரு தீர்வாகக் கூறுகிறது. அந்த கம்யூனிசம் வெறும் கம்யூனிசமாக அல்லாமல் ஆன்மீகக் கம்யூனிசமாகக் கூறப்படுகிறது. இறைவனைப் பொதுமைப்படுத்தி பெயரற்ற இறைவன் மூலம் புதிதாய் பிறப்பெடுக்கிற ஒரு திருச்சபையைக் கீறல்கள் கனவு காண்கிறது (Isaac Arumairajan, 2002). மேலும் சமூக மாற்றம் என்பது சமுதாயத்தின் ஒரு பிரிவு மேல்நிலையாக்கம் பெறுவதல்ல; மாறாக, சமநிலையாக்கம் பெறுவதையும் இப்புதினம் உணர்த்துகிறது.

## முடிவுரை

குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டு கதை படைக்கப்பட்டிருப்பினும், சமூக அமைப்பே அனைத்து சிக்கல்களுக்கும் காரணம் என்பதை இப்புதினம் விளக்குகிறது. எனவே இதற்கான தீர்வு சமூகத்திலிருந்தே பிறக்க வேண்டும் என்பதை இப்புதினம் உணர்த்துகிறது. நாட்டின் வறுமைக்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கும் எதிராக திருச்சபையும் களத்தில் இறங்கிப் போராட வேண்டும் என இப்புதினம் வலியுறுத்துகிறது. இதனைக் 'கிறித்தவக் கம்யூனிசம்' என இப்புதினம் சுட்டுகிறது.

## References

David Siddaiah, (2000) Novel Valarcci – Kiristava Ilakkiyam, Meyyappan Tamil Ayvagam, Chithabaram, India.

Hepzibah Jesudason, (2014) Puttham Vitu, Kalachuvadu Pathippagam, Nagercoil, India.

Isaac Arumairajan, (1975) Keeralkal, CLS, Chennai, India.

Isaac Arumairajan, (2002) Tamil Naavalkalil Samutaaya Maarram, IITS, Chennai, India.

Panchankam, K., (2016) Ilakkiyamum Tiranaayvuk Kootpaatum, Annam Tanjore, India.

Pichamuthu, N., (1998) TiRanaayvum ilakkiya KoLkaikaLum, Sakthi Puttaka Nilayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License